1973 மார்ச் 3]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) ஆயினும் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் அரபிக்கடலோரப்பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 351 லட்சம் செலவில் நிரந்தரமான அரண் ஒன்று கட்டுவதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்று, அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்தப் பணி இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைத்தவுடன் வேலை தொடங்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பல கடலோரப் பகுதிகள் வெகுவாக இந்தக் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, அவர்களின் அனுமதியைப் பெற்று, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நீர்ப்பாசனத் துறை அமைச்சர்கள் மகாநாடு நடைபெற்றபோது, மத்திய நீர்ப்பாசன அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், நம்முடைய தலைமைப் பொறியாளர் இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். அதற்கு ஆகும் செலவு 3½ கோடி ரூபாய். பணத்திற்காக மத்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். அவர்கள் அனுமதி அளித்தவுடன் பணி தொடங்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைமைப் பொறியாளரிடம் இருந்து பரிந்துரை எப்போது வந்தது? அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்பு வந்தது. மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கையெழுத்திற்காக பைல் பெண்டிங்கில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், நமது மாநிலத்திலே எந்தெந்தப் பகுதிகளில் கடலரிப்பு இருக்கிறது? அதைத் தடுப்பதற்குரிய திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு செலவாகும்? அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இதைப்பற்றி சொல்லிவிட்டேன். டெக்னிக்கல் டீட்டேய்ல்ஸ் பற்றி எனக்குத் தெரியாது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 3½ கோடி ரூபாய் ஆகும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அது எந்தெந்தப் பகுதிகளுக்கு என்று சரியாகத் தெரியவில்லை. அந்தத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக அரபிக் கடலோரத்தில், விளவங்கோடு தாலுகாவில் தூத்தூர், பூத்துறை, தேங்காப்பட்டினம், புத்தன்துறை, ராமன் துறை, எனயம், மிடாலம், குறும்பனை ஆகிய கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தப் பகுதியில் ஏற்கெனவே கட்டப்பட்ட சுவர் இடிந்து விழுந்து விட்டது. ஆகவே, மேற்கொண்டு சுவர் கட்டுவதற்குப் பதிலாக, கோளக் கடற்கரையில் கட்டப்பட்டிருப்பது போன்று பெரிய பெரிய பாராங்கற்களை அடுக்கி, கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பகுதியிலும் பெரிய பெரிய பாராங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்காகத்தான் தலைமைப் பொறியாளர் திட்டம் தயாரித்திருக்கிறார் என்று கருதுகிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த கடலரிப்புப் பற்றி துரித மான நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் சில கிராமங்களே கடலரிப்புக்குப் பலியாகிவிடும். ஆகையால் துரித நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி துரித நடவடிக்கைக்குத் தூண்டுதலாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, திருச்செந்தூர் கோவிலின் ஒரு பகுதி கடல் அரிப்பால் அழியும் நிலையில் இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருச்செந்தூர் கோவிலைப் பற்றி எனக்குத் தெரியாது.

திரு. எஸ். வடிவேல் : சார், சீர்காழி தாலுக்காவில் திருமுல்லைவாசலில் ஒவ்வொரு ஆண்டும் கடல் கொந்தளிப்பின் காரணமாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற முஸ்லீம் சமுதாயத்தினர் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள்.

1973 மார்ச் 3]

அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்தபோது அதுபற்றி ஒரு மகஜர்கூட கொடுத்தார்கள். அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்.

(திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக்கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பைத் தடுப்பது பற்றி, அதுசம்பந்தப்பட்ட கேள்வியைக் கேளுங்கள்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, இராமேஸ்வரம்-தனுஷ்கோடி கடலரிப்பைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நமது கடல்பகுதி ரொம்ப நீளம். அதனுல் கடலைப்பற்றிக் கேட்டுக்கொண்டே போகலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல.

செய்யாறுக்குத் தனி கூட்டுறவு துணைப்பதிவாளர்

* 233. **வினு—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், செய்யார் கோட்டத்திற்கு ஒரு தனி கூட்டுறவு துணைப்பதிவாளர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ஒரு கூட்டுறவு துணைப்பதிவாளர் வட்டம் செய்யாறுக்கு ஏற்கனவே அமைக்கப்பெற்றுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: செய்யாற்றுக்கு புதிதாக ஒரு துணைப்பதிவாளர் நியமிக்கப்படுகின்ற அதேநேரத்தில் இராணிப்பேட்டையில் இருக்கும் கூட்டுறவுத் துணைப்பதிவாளரை மாற்றப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மாற்ருமல், இராணிப்பேட்டையில் துணைப்பதிவாளர் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ஏற்கெனவே இராணிப்பேட்டையில் இருந்த துணைப்பதிவாளர் பதவி அப்படியே இருக்கிறது.